RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1511

OPEN ACCESS

# குற்றாலக் குறவஞ்சியும் சைவத்தின் மேன்மையும்

வே. தனுஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா

# The Supremacy of Shaivism in Tirukkutralak Kuravanchi

V. Dhanuja [a, *]

[a] Department of Tamil, Sri S. Ramasamynaidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: srriniti@gmail.com

Received: 03-07-2022
Revised: 07-10-2022
Accepted: 20-10-2022
Published: 09-12-2022

## ABSTRACT

In Sitrilakkiyam, it contained 96 categories, which were mentioned by Veeramamunivar's Sathuragarathi. The poems are sung with one of the lords, kings, vallas, or talaivans as the leader. When devotional literature began to flourish in the Middle Ages, various literatures appeared. Most of the short stories were created with themes of God's experience and love. Kuravanchi, Pillaithamil, Parani, Kalambagam, Thoothu, Pallu, Kowai, Anthathi, etc. are notable among the Sitrilakkiyam literatures. The purpose of this article is to examine the excellence of Tirukkutralak Kuravanchi and the superiority of Shaivism among them.

**Keywords:** Kurmbala Esar, Keeping the mind with Shiva, Singan, Singi.

## முன்னுரை

இலக்கிய வகைகளுள் சிற்றிலக்கியங்கள் என்று வழங்கப்பெறும் பிரபந்தங்கள் 96 வகையாகும் என, வீரமாமுனிவரின் சதுரகராதி சுட்டுகின்றது (Innasi, 2016). இறைவன், மன்னன், வள்ளல், தலைவன் ஆகியோருள் ஒருவரைத் தலைவராகக் கொண்டு பாடப்படுபவை சிற்றிலக்கியங்கள். இடைக்காலத்தில் பக்தி இலக்கியம் தலைதூக்கத் தொடங்கியதும் பல்வேறு சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. இறையனுபவமும் காதலும் இழையோடும் வகையில் பெரும்பாலான சிற்றிலக்கியங்கள் படைக்கப்பட்டன. குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், தூது, பள்ளு, கோவை, அந்தாதி போன்றவை சிற்றிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சைவ சமயத்தின் ஏற்றத்தைக் கூறும் திருக்குற்றாலக் குறவஞ்சியின் நூற்சிறப்பையும் சைவ சமயத்தின் மேன்மையையும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறவஞ்சி தோற்றமும் வளர்ச்சியும்

காதலால் வருந்தும் தலைவியின் நிலை அறியப் பழங்காலத்தில் குறிபார்த்தல் உண்டு. குறி சொல்லுபவள் கட்டுவிச்சி என்றும், அகவன் மகள் என்றும், அழைக்கப்பட்டாள். குறுந்தொகையில்,

“அகவன் மகளே யகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

என வரும் பாடலில் குறிசொல்லல் இடம் பெறுகின்றது (Puliyur kesigan, 2020). தலைவி தலைவனைக் கண்டு காதல் கொண்டதன் காரணமாக மனங் கலங்குகின்றாள். பாட்டில், அவள் அகவன் மகளை அதாவது கட்டுவிச்சியைத் தலைவனின் நல்ல நெடுங்குன்றத்தை மீண்டும் பாடுவாயாக" என்று கூறி தலைவன் புகழைக் கேட்க விரும்பும் பான்மையினைக் காணலாம். இத்தகைய பாடல்கள் நற்றிணை அகநானூறு குறிஞ்சிப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களிலும் திவ்வியப்பிரபந்தம் பன்னிருதிருமுறை முதலிய சமய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய வடிவத்தில் குறிபார்த்தல் குறம் என்னும் பெயரால் ஒருறுப்பாக இடம் பெற்றுள்ளது.

கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிரு பாட்டியல் குறத்திப்பாட்டு என்றொரு சிற்றிலக்கிய வடிவத்திற்கு இலக்கணம் கூறுகின்றது. இவ்வகை இலக்கியத்தில் குறி சொல்லுதலே மையக் கருத்தாகும். சங்க இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் கலம்பகத்திலும் வருகின்ற குறிசொல்லுதல், தலைவன் புகழ் பாடல் முதலிய கருத்துக்களும் பன்னிருபாட்டியலில் இடம்பெற்றுள்ள குறத்திப்பாட்டும் ஒருங்கிணைந்தே கி.பி.18ஆம் நூற்றாண்டில் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கிய வடிவம் தோன்றியது. முதன் முதல் தோன்றியதாக நமக்குக் கிடைக்கும் குறவஞ்சி வடிவ இலக்கியம் திரிகூடராசப்பக்கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சியே ஆகும்.

## குறவஞ்சியின் இலக்கணம்

குறவஞ்சி என்னும் சிற்றிலக்கிய வடிவத்திற்குரிய இலக்கணக்கூறு தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

## இலக்கிய வடிவங்கள்

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்

ஒட்டிய திறத்தாற் செய்தக் கண்ணும்"

எனவரும் தொல்காப்பியக் களவியல் நூற்பாவிற்குக் "கட்டினும் என்பது கட்டு வைப்பித்த வழியும் அவர் சொற்கேட்டுத் தோழியை வினாவும் என்றவாறு" என்றும் "கழங்கினும் என்பது கழங்கு வைத்துழியும் அவர் சொற்கேட்டுத் தோழியை வினாவும் என்றவாறு" என்றும் இளம்பூரணர் உரை கூறுவார் (Ilampuranar, 1969).

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்து நிகழ்ச்சிகளையும் பத்துப்பாடல்களால் உரைப்பது குறத்திப்பாட்டு என்பது பன்னிருபாட்டியல் வரையறை, இதனை,

"இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும்

திறம்பட உரைப்பது குறத்திப் பாட்டே"

"குறத்திப்பாட்டும் அதனோரற்றே"

என்னும் நூற்பாக்கள் தெரிவிக்கின்றன. ஆசிரியவிருத்தம் சிந்து, கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலிய பல்வேறு பாவினங்கள் இவ்வடிவத்திற்குரிய யாப்பாகும் (Govindharasa muthaliyur, 2017).

## குற்றாலக் குறவஞ்சி

மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலத்துக்குரிய குறவர் குடியின் தோன்றி வஞ்சிக்கு (பெண்ணுக்கு) முதன்மை கொடுத்துக் குறத்தி ஒருத்தி குறிசொல்வதாக அமைத்துப் பாடப்படும் நூல் குறவஞ்சி நூலாகும். அவ்வகையில் திருக்குற்றாலம் என்னும் தலத்தின்

பெருமைகளையும், குற்றாலத்தில் வீற்றிருக்கின்ற இறைவனான ஈசனின் சிறப்புகளைப் பாடுவது குற்றாலக் குறவஞ்சி. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் விரவிப் பாடப்பெற்ற பெருமை குற்றாலக் குறவஞ்சிக்கு உண்டு.

## தலச்சிறப்பு

பாண்டி நாட்டுத் திருத்தலங்களுள் திருஞான சம்பந்தரால் போற்றி வழிபடப்பட்ட சிறப்புப் பொருந்தியது திருக்குற்றாலம் என்னும் திருத்தலம் ஆகும். இந்தத் தலத்தின் பெருமையை இரண்டு பதிகங்களில் போற்றிப் பாடியுள்ளார் திருஞான சம்பந்தர்.

“மலை ஆர்சாரல் மகவுடன்வந்த மடமந்தி

குலை ஆர்வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்

இலை ஆர் சூலம் ஏந்திய கையான் எயில்எய்த

சிலையான்மேய நன்னகர் போலும் சிறுதொண்டீர்”

“போதும் பொன்னும் உந்தியருவி புடைசூழக்

கூதன்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்”

காகம் அணுகா மலை என்றும், செல்லினங்கள் முழவு கொட்ட மயிலினங்கள் ஆடும் மலை என்றும், வானரங்கள் கனிகொடுத்த மந்தியொடு கொஞ்சும் என்றும் குற்றாலத்தின் எழிலையும் பெருமையையும் பல்வேறு வர்ணனைகளால் விரிவாகப் பேசுகின்றாள் குறத்தியாகிய சிங்கி. குற்றாலத்தின் பெருமைகளைப் பற்றிக் குற்றாலத் தலபுராணம் விரிவாகக் கூறுகின்றது. மலையின் தோற்றமும், மலையினின்று வீழும் அருவிகளின் தோற்றமும் காண்போரைக் கவரவல்லன. வட அருவி என்னும் குற்றால அருவி, சிவமது கங்கை, செண்பகத் தடாகம், பொங்குமா கடல் சித்திராநதி என்னும் ஐந்தருவிகளில் மூழ்கினால், மூழ்குவாரின் பாவங்களைப் போக்கும் சிறப்புடையது திருக்குற்றாலம். இங்குள்ள இறைவன் குழல்வாய்மொழி அம்மையுடன் கூத்தாடுவதாகச் சித்தகரிக்கப்படும் இடம் சித்திரசபை என்னும் பெயரையுடையது (Subramanian, 1996).

## நூல் சிறப்பு

திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் என்பவர். இயலும், இசையும் கலந்து நாடகமாய் நடித்துக் காட்டத்தக்க வகையில் இந்நூலை அவர் இயற்றியுள்ளார். குறும்பலா ஈசரான சிவபெருமான் விடையின் மேலேறி பவனி வருகின்றார். அச்செய்தியை அறிவிக்க, கட்டியங்காரன் வருகின்றான். ஈசன் உலா வருவதைக் காண எழுவகைப் பருவ மங்கையரும் ஓடி வருகின்றனர். அவர்கள் இறைவன் திருக்கோலம் கண்டு மயங்கிப் பலவாறு கூறிக்கொண்டு உலாவைத் தொடர்ந்து வருகின்றனர். அங்கு பந்தடித்துக் கொண்டிருந்த பேரழகுப் பெண்ணை வசந்தவல்லி என்பவள் இறைவன் திருக்கோலம் கண்டு வியந்து இறைவன்பால் காதல் மயக்கத்தில் மூழ்கித் திளைத்தாள். இறைவனிடம் சென்று அவர்தம் கொன்றை மலர் மாலையை வாங்கி வருமாறு தோழியைத் தூது விடுகின்றாள் வசந்தவல்லி. இறைவனை எண்ணி வருந்தியிருந்த வேளையில் குறிச்சொல்லும் குறத்தியான சிங்கி வருகின்றாள். அவள் குற்றால மலையின் சிறப்புகளையும், நாடு நகர் பாடுகின்றாள். வசந்தவல்லியின் காதலைக் கூறிய குறத்தி, நன்னகரில் ஈசர் உன்னை மேவ வருவார் என்று கூற, அவள் மகிழ்ந்து அக்குறத்திக்குப் பல அணிகலன்களைப் பரிசாக அளித்தாள்.

இந்நிலையில் சிங்கியைத் தேடிச் சிங்கன் (குறவன்) வருகின்றான். வந்தவன் குற்றால நகரில் அவளைக் கண்டு மகிழ்ந்து உரையாடும் பகுதி காதல் சுவை மிக்கதாக விளங்குகின்றது.

## குறும்பலா ஈசர்

குறும்பலா மரத்தின் கீழ் எழுந்தருளியதால் குற்றாலத்தில் உள்ள சிவனுக்குக் குறும்பலா ஈசர் என்ற பெயருண்டு எனக் குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடுகின்றது (Puliyur kesigan, 2009). இதுமட்டுமன்றி, சைவ சமயத்தவர் போற்றும் சிவபெருமானை, திரிகூடநாதர், குறும்பல வீசுரர், வித்தகர், திரிகூடலிங்கர், திரிகூடச் செல்வர், குறும்பலாவினர், குற்றாலத்தீசர் போன்ற பல்வேறு பெயர்களைச் சுட்டி ஈசனைப் போற்றுகின்றது. குற்றாலக் குறவஞ்சி சைவத்தின் மேன்மையை விளக்கும் வகையில் சிவபெருமானே இந்நூலில் பாட்டுடைத் தலைவனும் சிறப்புக்குரியவனுமாகச் சித்தரிக்கப்பட்டுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது (Puliyur kesigan, 2009).

## ஈசரின் பவனி

எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமானின் பவனியைக் கட்டியங்காரன் அறிவிக்கும் காட்சி மகிழ்ச்சியும் பரவசமும் ஊட்டக் கூடியது.

"பவனி வந்தனரே - மழவிடைப் பவனி வந்தனரே"

என்று தொடங்கிய கட்டியங்காரன்

"சிவனுமாய் அரி அயனு மானவர்"

அண்டரும், முனிவரும், அமரரும், மனிதரும், தொண்டரும் புடை சூழப் பவனி வருவதாக நூல் சுட்டுகின்றது (Puliyur kesigan, 2009). "தடுப்பது ஒருகரம்" என வரும் பாடல் முதலாக இறைவனின் திருக்கோலம் உள்ளது உள்ளபடியே வர்ணிக்கப்படுகிறது. இவ்வாறு விடைமேல் பவனியைத் தொடங்கிய இறைவன், பல்வேறு படைகள் புடைசூழ, பேரிகைகள் முழங்க, அடியார்களின் திருப்பல்லாண்டிசையோடு, குழல்மொழித் தையலாள் இடம் இருக்க பவனி வருவதாகக் குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடுகின்றது (Puliyur kesigan, 2009).

## சைவத்தின் மேன்மை

சைவத்தின் மேன்மையை வலியுறுத்தத் தோன்றிய நூல் குற்றாலக் குறவஞ்சி எனலாம். எனவே, விநாயகர், முருகப்பெருமான், குழல்வாய்மொழி அம்மை, அப்பர், சம்பந்தர், சுந்தரர், அகத்தியர், மாணிக்கவாசகர் ஆகியோரைத் துதித்து ஆசிரியர் தம் நூலைப் பாடியுள்ளார். நூலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை சைவ சமயமே போற்றப்படுகின்றது.

சமணம், வைணவம் போன்ற பிற சமயங்களிலும் சைவமே மேலானது எனப் பல்வேறு இடங்களில் குற்றாலக் குறவஞ்சி வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது (Puliyur kesigan, 2009). அவற்றுள் ஒருசில எடுத்துக்காட்டுகள் மட்டுமே இக்கட்டுரையில் சுட்டப்பெறுகின்றன. சிவபெருமானின் சிறப்புகளைக் கூறும் பகுதிகளிலும் வேறு பல பகுதிகளிலும் சைவத்தின் பெருமைகள் சுட்டப்படுகின்றன.

"சைவர் மேலிடச் சமணர் கீழிடச்

சகல சமமும் ஏற்கவே"

என்னும் வரிகளிலும்,

"ஐவர் நாயகன் வந்தனன் பல

அமரர் நாயகன் வந்தனன்"

என்னும் வரிகளிலும் சிவனின் ஏற்றம் கூறப்படுகின்றது (Puliyur kesigan, 2009).

சித்திர சபையாரின் சித்திர நதியைச் சூழ்ந்த கோயில், காடுகள், சோலைகளிலிருக்கும் குருவிகளை வேட்டையாட வந்த குளுவன் என்னும் குறவன்,

“காதலஞ் செழுத்தார் போதநீ றணியார்

கைந்தரம் பெடுத்துக் கின்னரம் தொடுத்துப்

பாதகர் தோலால் பலதவில் அடித்துப்

பறவைகள் படுக்கும் குறவனும் நானே

தலைதனில் பிறையார் பலவினில் உறைவார்

தகையினை வணங்கார் சிகைதனைப் பிடித்தே

பலமயிர் நறுக்கிச் சிலகண்ணி முறுக்கிப்

பறவைகள் படுக்கும் குளுவனும் நானே”

எனத் தன்னைப் பற்றிக் கூறுவதை விடச் சிவனின் பெருமைகளைத் தான் மிகுதியாகப் பேசுகின்றான் (Puliyur kesigan, 2009). சித்தத்தைச் சிவன்பால் வைத்து வழிபடுவோர்க்குத் துன்பம் இல்லை என்றும், சிவனை வழிபாடாதவர்கள், பாதகர் என்றும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் குறவன் வாயிலாகக் குற்றாலக் குறவஞ்சி சைவத்தை உயர்த்திப் பேசுவதைக் காணமுடிகின்றது. தாயுமானவரும் சைவம் போற்றுவோர்க்கு இன்பநிலை வாய்க்கும் என்று கூறியுள்ளார்.

“சிந்தை அவிழ்ந்து அவிழ்ந்து சின்மயம்ஆம் நின்னடிக்கே

வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும் பராபரமே” (Thayumanavar, 2014)

பறவைகள் பறந்துபோன காட்சியைக் கூற வந்த குறவன்,

“பம்பும் வடபால் அருவியில் தோய்ந்தவர்

பாவம் கழுநீராய்ப் போவது போலவும்

கும்ப முனிக்குச் சிவமான காலம்

குதித்தோடிப் போன வயிணவர் போலவும்

அம்பிகை பாகர் திரிகூட நாதர்

அடியவர் மேல்வந்த துன்பங்கள் போலவும்”

என்று குறிப்பிடுகின்றான் (Puliyur kesigan, 2009).

அகத்தியரின் பக்திக்கு இணங்கிய திருமால் தன்னுருவை மாற்றி சிவனாகக் காட்சியளித்தார். அதனைக் கண்ட திருமால் அடியார்கள் குதித்தோடினர் அதைப்போலத் திருக்குற்றாலத்து ஈசனை வணங்குகின்ற அடியவரின் துன்பங்கள் விலகிவிடும் என்ற கூற்றின் வாயிலாக சைவத்தின் சிறப்பு வலியுறுத்தப்படுகின்றது.

“சித்திர சபேசர்மேலே சிவசமயப்

பத்தியில் லாப்பேயர் போலே”

என்று சிவப்பபற்றில்லாதோரைப் பேயர் எனச் சாடுகின்றான் சிங்கன் (Puliyur kesigan, 2009). சிங்கியைத் தேடிச் சென்ற சிங்கனிடம், சிங்கியைச் சேர்த்து வைக்கக் கூலி கேட்கும் நூவன்,

“சாட்டிநிற்கும் அண்டமெலாஞ் சாட்டையிலாப் பம்பரம்போல்

ஆட்டுவிக்கும் குற்றாலத் தண்ணலார்”

என்று உலகையெல்லாம் இயக்குபவன் சிவனே எனக்கூறுகின்றார் (Puliyur kesigan, 2009). இதனை,

"அகிலாண்ட கோடியெல்லாம் ஒன்றையொன்றீர்த்துக் கொண்டு அந்தரத்திலே தொங்குகின்றன. திருக்குற்றாலத்து எம்பெருமான் கயிறு துணையின்றி அவ்வண்டங்களனைத்தையுஞ் சுற்றிப் பம்பரங்களைப் போல ஆடவிட்டுக் கொண்டிருக்கும் அருட்பெருங் காட்சியை அகக்கண்ணாற் கண்டுள்ளம் பூரித்துப் பாடுகின்றார்" என்பர்.

"சுற்றாத ஊர்தோறும் சுற்றவேண்டாம் புலவீர்

குற்றாலம் என்றொருகாற் கூறினால் வற்றா

வடவருவி யானே மறுபிறவிச் சேற்றில்

நடவருவி யானே நமை" (Puliyur kesigan, 2009)

என்றும்,

"ஆதிமறை சொன்னவனை அனைத்துயிர்க்கும் முன்னவனை

மாதுகுழல்வாய்மொழி சேர் மன்னவனை வாழ்த்துகிறேன்" (Puliyur kesigan, 2009)

என்றும் வரும் வாழ்த்துப் பாடல்கள் சைவத்தின் மேன்மையையும் குறும்பலா ஈசரின் சிறப்புகளையும் உணர்த்துகின்றன.

## முடிவுரை

குறவஞ்சி நூல்களுள் முதன்மையானது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். குற்றால மலையின் சிறப்பையும் ஈசரின் மகிமையையும் எடுத்துரைக்கும் இந்நூலில் குறத்தியின் வாயிலாகக் குற்றால மலையின் சிறப்புகளும், இயற்கை வர்ணனைகளும் எழிலுறச் சித்தரிக்கப்பட்டுள்ளன. சைவத்தின் மேன்மையைப் போற்றும் இந்நூல் குறவஞ்சி என்னும் இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது. திருக்குற்றாலத்தில் வீற்றிருக்கும் இறைவன் குறும்பலா ஈசர் ஆவார். அவ்ஈசனின் பவனி பற்றிய காட்சி நூலில் சொல்லோவியமாகப் படைக்கப்பட்டுள்ளது. சைவமே பிற சமயங்களைக் காட்டினும் உயர்ந்தது என்பதை வலியுறுத்தும் சிற்றிலக்கியமாக குற்றாலக் குறவஞ்சி விளங்குகின்றது. திருக்குற்றாலமும், குறும்பலா ஈசரும் நூலின் தொடக்க முதல் இறுதிவரை சிறப்பிக்கப்படுகின்றனர் எனலாம்.

## References


Govindharasa Muthaliyur, A. (2012), Panniru Thirumuraikal, Vardhamanan Pathippagam, Chennai, India.

Ilampuranar, (1969) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Innasi, S. (2016) Sathuragarathi veeramamunivar, Sandhiya Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2009) Kutralla Kuravanji, Paari niliyam, Chennai, India.

Puliyur kesigan, (2020) Kurunthogai, Paari niliyam, Chennai, India.

Subramanian, S.V. (1996) Panniru Thirumuraikal, Manivasagar Pathippagam, Chennai, India.

Thayumanavar, (2014) Paraparakanni, International Institute of Tamil Studies, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License